தினமணி

"குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு இயந்திரங்கள்'

First Published : 19 Sep 2010 02:15:18 PM IST

திருவள்ளூர், செப். 18: திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் நில மேம்பாட்டு திட்டம் மற்றும் சிறு பாசனத் திட்டத்தின்படி குறைந்த வாடகைக்கு விவசாய இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளது.

÷இதன்படி, மேடு பள்ளங்கள் நிறைந்த தரிசு நிலத்தை மேம்படுத்த மண் தள்ளும் இயந்திரமும், உற்பத்தித் திறனை பெருக்குவதற்கு கல்டிவேட்டர், கேஜ்வீல், ரோட்டவேட்டர் போன்ற விவசாய கருவிகளுடன் கூடிய உழுவை இயந்திரம் மற்றும் அறுவடை இயந்திரம் வாடகைக்கு முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

÷வாடகை விபரம்: மண் தள்ளும் இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு | 720, உழுவை இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு | 285, அறுவடை இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு |805-க்கும் வழங்கப்படும்.

÷சிறுபாசனத் திட்டம்: பல்வேறு மண் படிவங்களில் குழாய் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீர் மூலம் பாசன வசதிகள் கிடைத்திட தேவையான சிறுபாசனக் கருவிகள்

வாடகைக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

÷இதன்படி, பெர்குஷன் துளைக் கருவி நாள் ஒன்றுக்கு | 300, கைத்துளைக் கருவி (6 விட்டமுள்ள குழாய் இறக்க) ஒரு மீட்டருக்கு | 30, நில நீர் ஆய்வுக் கருவி மூலம் ஒரு இடம் தேர்வு செய்ய | 500-ம் வாடகையாக பெறப்படும். இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மேற்கண்ட திட்டங்களின் கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் கருவிகளை வாடகைக்கு அமர்த்தி பயன்பெறலாம்.

÷மேலும் விவரங்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் திருவள்ளூர் : 9789864292, பொன்னேரி : 9443046696, திருத்தணி 9443046696 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொண்டு அறிந்துக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பயிர்க்கடனை தாராளமாக வழங்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 19 Sep 2010 02:43:17 PM IST

திருச்சி, செப். 18: கடுமையான விதிகளைத் தளர்த்தி விவசாயிகளுக்குத் தாராளமாக பயிர்க் கடன் வழங்க வேண்டும் என திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறை தீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திமுக விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் அ. கருப்பண்ணன் பேசியது:

"பல்வேறு பிரச்னைகள் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் குறைந்து வருகிறது. இந்நிலையில், தற்போது மழை பெய்து வருவதைத் தொடர்ந்து சாகுபடிப் பணிகள் தொடங்கவுள்ளன. எனவே, விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் தாராளமாக வழங்க வேண்டும்' என்றார் கருப்பண்ணன்.

காங்கிரஸ் விவசாயப் பிரிவு மாவட்டத் தலைவர் புலியூர் அ. நாகராஜன் பேசியது:

"கர்நாடக அரசு கூடுதலாகத் தண்ணீர் விட தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். மேலும், நமக்குத் தர வேண்டிய தண்ணீரைத் திறந்து விடுவதற்கும் கர்நாடக அரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்' என்றார் நாகராஜன்.

பாரதிய கிசான் சங்க மாநிலப் பொதுச் செயலர் பி. அய்யாக்கண்ணு பேசியது:

"குறுவை பயிர் அறுவடை நடைபெற்று வருகிறது. எனவே, தேவையான இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும்' என்றார் அய்யாக்கண்ணு.

இதற்குப் பதிலளித்த ஆட்சியர் தா. சவுண்டையா, "விவசாயிகள் கேட்கும் இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்' என்றார் அவர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பு) மாவட்டச் செயலர் அயிலை சிவ. சூரியன் பேசியது:

"முள்ளிக்கரும்பூர் பகுதியில் நான்கு வழிச் சாலைக்காக உய்யகொண்டான் வாய்க்கால் அடைக்கப்பட்டுள்ளதால், நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாற்று விடும் பணியும் பாதிக்கப்பட்டுள்ளது' என்றார் சிவ. சூரியன்.

நீரோட்டம் தடைப்படக் கூடாது என்றும், அந்த இடத்தில் தண்ணீர் செல்லும் வகையில் குழாய் அமைக்க வேண்டுமென இந்திய நெடுஞ்சாலை ஆணையத்திடம் அறிவுறுத்துமாறும் பொதுப் பணித் துறை அதிகாரிக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

இளைஞர் காங்கிரஸ் மக்களவை பகுதிச் செயலர் எஸ். ரமேஷ் பேசியது:

உய்யகொண்டான் பாசனப் பகுதிகளான சத்திரம், ஊராளி, ஆணவள்ளி, திருச்சாப்புரம், ரெங்காச்சிப்புரம், கெப்ரிப்புரம் ஆகிய இடங்களில் தண்ணீர் பாயவில்லை. இதனால், 500 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள முடியாத நிலை நிலவுகிறது. எனவே, இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் ரமேஷ்.

அய்யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்க ஒருங்கிணைப்பாளர் என். வீரசேகரன் பேசியது: "கொள்ளிடம் வடகரையில் முக்கொம்பு முதல் திருமானூர் வரை கரை பலப்படுத்தப்பட்டது. ஆனால், அண்மையில் பெய்த மழையில், மண் கரைந்து சிதைந்து வருகிறது.

எனவே, மீண்டும் மண் போட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் வீரசேகரன்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச் சங்கத் துணைச் செயலர் கவண்டம்பட்டி ஆர். சுப்பிரமணியன் பேசியது:

"கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன் அட்டை வைத்திருப்பவர்கள் உள்பட அனைத்து விவசாயிகளுக்கும் தடையில்லாச் சான்று இல்லாமலே கடன் வழங்க மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அறிவுறுத்த வேண்டும்' என்றார் சுப்பிரமணியன்.

தினமலர்

**நெல் பயிரில் இலை சுருட்டுப் புழு தாக்குதல் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,03:00 IST

கடலூர்: நெல் பயிரில் பரவி வரும் இலை சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் ஆலோசனை கூறியுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் குறுவை பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் இலை சுருட்டுப் புழுக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இந்த புழுக்கள் இலைகளை நீள வாட்டத்தில் மடித்து பச்சையத்தை சுரண்டி உண்டு விடுவதால், இலைகளில் திட்டு திட்டாக வெள்ளையாக இருக்கும். இலைகளில் பச்சையம் இல்லாததால் ஒளிச் சேர்க்கை குறைந்து பயிரின் வளர்ச்சி பாதிக்கும். தோகைகள் காய்ந்தும் காணப்படும். இலை சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்திட விளக்கு பொறி அமைத்து தாய் அந்து பூச்சியை அழிக்க வேண்டும். பின்னர் இயற்கை பூச்சிக் கொல்லியான வேப்பம் புண்ணாக்கு அல்லது வேப்ப எண்ணையை உரத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். ரசாயன பூச்சிக் கொல்லியான மோனோகுராடோபாஸ் அல்லது ட்ரைஅசோபாஸ் அல்லது புரோபோனோபாஸ் இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒரு லிட்டர் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இலை சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை வராமல் தடுத்திட பரிந்துரை அளவை விட தழைச்சத்து உரத்தினை கூடுதலாக இடுவதை தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப் படும் தழைச்சத்து உரத்தை அடியுரமாகவும், அதிக தூர் பிடிக்கும் தருணம் மற்றும் கதிர் வரும் நேரங்களில் பிரித்து இட வேண்டும். மேலும் விவரம் வேண்டுவோர் அருகில் உள்ள வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,03:04 IST

புவனகிரி: வண்டுராயன்பட்டில் வயல்களில் எலியைக் கட்டுப்படுத்தும் முறை, ஐந்தலை கரைசல் தயாரிக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. புவனகிரி அருகே வண்டுராயன்பட்டு கிராமத்தில் சிதம்பரம் அண் ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகளின் அனுபவ பயிற்சி முகாம் நடந்து வருகிறது. விவசாயிகள்

வயல்களில் எலியை கட்டுப்படுத்தும் முறை,  ஐந்தலை கரைசல் தயாரிக்கும் முறை குறித்து விளக்கப் பட்டது.

**மானிய விலையில் விவசாய உபகரணங்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,02:27 IST

விழுப்புரம்:விழுப்புரத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது.வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 4 லட்சத்து 16 ஆயிரத்து 890 ரூபாய் மதிப்பிலான விவசாய உபகரணங்கள், 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானிய விலையில் வழங்கப்பட்டது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் பனப்பாக்கம் நாராயணன், குப்பம் சிவக்குமார், மல்ராஜன் குப்பம் முத்துக்குமார் ஆகியோருக்கு தலா 28 ஆயிரம் ரூபாய் மானியத்தில் களையகற்றும் (பவர் வீடர்) கருவிகளும், கிளியனூர் முத்துராமனுக்கு 50 ஆயிரம் மானியத்தில் களையகற்றும் கருவியும் வழங்கப்பட்டது.

ஓட்டேரிப்பாளையம் சுப்ரமணி, புதுக்குப்பம் உப்புவேலூர் கிருஷ் ணமூர்த்திக்கு தலா 45 ஆயிரம் மானியத்தில் பவர் டில்லர்களும், மேற்கு விக்கிரவாண்டி அமுலுதினுக்கு 25 ஆயிரம் மானியத்தில் மரம் நடு துளையிடும் கருவியும், எஸ்.வி.பாளையம் ஜெயராமன், சத்தியமங்கலம் ராமலிங்கம் ஆகியோருக்கு தலா 29 ஆயிரம் மானியத்தில் பவர் வீடர் கருவிகளும் வழங்கப்பட்டது.கலெக்டர் பழனிசாமி உபகரணங்களை வழங்கினார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் காதர்மைதீன், உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர்கள் ரவீந்திரன், சந்திரசேகரன் உடனிருந்தனர்.

**தோட்டக்கலை துணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,02:57 IST

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதி வயல்களை தோட்டக் கலை துணை இயக்குனர் ஆய்வு செய்தார்.கள்ளக்குறிச்சி பகுதியில் தோட்டக்கலை துறை சார்பில் சொட்டு நீர் பாசனம் அமைத்து விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் மஞ்சள், மரவள்ளி போன்ற குறைந்த நீர் தேவையுள்ள பயிர்கள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கள்ளக்குறிச்சி பகுதிகளில் சொட்டு நீர் பாசனத்தால் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள், மரவள்ளி பயிர்களை தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் 65

சதவீதம் மானியம் அளிக்கப்பதுடன், நீரில் கரையும் உரமும் சேர்த்து வழங்குவதாக அவர் கூறினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்புராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமர், இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

**செம்மை நெல் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,02:24 IST

திண்டிவனம்:திண்டிவனம் அடுத்த ஆலங்குப்பம் கிராமத்தில் செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது.திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் கணிணி மற்றும் வீடியோ காட்சிகளாக காண்பித்து விளக்கினர். விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை விஞ்ஞானி நடராஜன், நெல்லில் விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கினார்.

செம்மை நெல் சாகுபடிக்கேற்ற பாய் நாற்றங் கால் செயல் விளக்கத்தை திட்ட விஞ்ஞானி பிரபு செய்து காண்பித்தார். ஏரி பாசன சங்கத் தலைவர் காசிநாதன் மற்றும் 50 முன்னோடி விவசாயிகள் மற்றும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவிகள் ஆறு பேரும் பயிற்சி முகாமில் கலந்துக் கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர்கள் ஆறுமுகம் ,இளங்கோவனும் செய்திருந்தனர்.

**காப்பீட்டு திட்டத்தில் பயன் பெற விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,02:27 IST

விழுப்புரம்:காய்கறி பயிரிடுவோர் அரசு மானியத்துடன் கூடிய பருவநிலை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.இது குறித்து தோட்டக் கலை துறை துணை இயக் குனர் பன்னீர் செல்வம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மாவட்டத்தில் காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன் பெற அரசு மானியத்துடன் கூடிய பருவநிலை பயிர் காப் பீட்டுத் திட்டம் இந்தாண் டிற்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் காய்கறி சாகுபடியில் பருவ நிலையால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது.ஒரு ஏக்கருக்கு காப்பீட் டுத் தொகை மதிப்பு 14 ஆயிரம் ரூபாய். மொத்த பிரிமியம் 1776 ரூபாய், இதில் அரசு மானியமாக 849 ரூபாய் வழங்குவதால் விவசாயி ஒருவரின் பங்களிப்பு 927 ரூபாய் கட்ட வேண்டும்.இத்திட்டத்தில் சராசரி மழை அளவிற்கும் அதிகமான மழை அல்லது குறைவான மழை பெய்தல் பாதிப்பும், பருவ

நிலையால் ஏற்படும் நோய்கள், தட்ப வெப்ப நிலை பாதிப் புகளால் பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டால் அதற் கான மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்கப்படும்.

விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி காய்கறி பயிர் செய்து பயனடையலாம். மேலும் விபரங்கள் பெற 04146-221163 என்ற தொலை பேசி எண் ணிலும், அந்தந்த பகுதி தோட்டக்கலை உதவி இயக் குனர்கள், வங்கி மேலா ளர்கள், கூட்டுறவு வங்கி செயலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,03:09 IST

திண்டிவனம்:திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் ஏரிப்பாசன விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம் ஒலக்கூர் ஒன்றியம் கீழ்ஆதனூரில் நடந்தது.கீழ்ஆதனூர் ஊராட்சி தலைவர் வச்சலா தலைமை தாங்கினார். அ.தி.மு.க., ஒன்றிய கவுன்சிலர் இந் திரா பன்னீர், தி.மு.க., கிளை செயலாளர் சீத்தா, முன்னாள் ஊராட்சி தலைவர்கள் மணி, ஏழுமலை, அ.தி.மு.க., கிளை செயலாளர் செல்வராஜ். வார்டு உறுப்பினர்கள் லோகநாதன், அரும்பு முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி தலைவர் தீனதயாளன் வரவேற்றார்.திண்டிவனம் எண் ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலை யத்தின் தலைவர் டாக்டர் ராமமூர்த்தி, உதவி பேராசிரியர் டாக்டர் அன்புமணி, இளம் ஆராய்ச்சியாளர்கள் ஜெயலட்சுமி, சுப்ரமணி, திரிபுரசுந்தரி, சிலம்பரசன் பேசினர். முன் னோடி விவசாயிகள் கோதண்டராமன், விஸ்வநாதன், துரைக் கண்ணு, செல்லப்பன், வெங் கடேசன், சின்னையன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**ஆத்தூர் வேளாண் சங்கத்தில் மஞ்சள் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,04:28 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டாலுக்கு 900 ரூபாய் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரத்தினங்களில் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. ஏலத்துக்கு ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, தம்மம்பட்டி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி,

சின்னசேலம், நைனார்பாளையம், பெரம்பலூர் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்து வரும் மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 16 ஆயிரத்து 330 ரூபாய்க்கு விற்ற மஞ்சள் தொடர்ந்து சரிவை நோக்கி சென்றது. அதனால் இருப்பு வைத்த மஞ்சள் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.கடந்த 5ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 13 ஆயிரத்து 499 ரூபாய் விற்றது. 11ம் தேதி விநாயகர் சதுர்த்தியன்று வெளிமாநில மஞ்சள் வியாபாரிகள் மஞ்சள் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாத சூழலால் மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டன.நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 14 ஆயிரத்து 399 ரூபாயும், குறைந்தபட்சமாக 13 ஆயிரத்து 789 ரூபாயும், உருண்டை மஞ்சள் அதிகபட்சமாக 14 ஆயிரத்து 139 ரூபாயும், குறைந்த பட்சமாக 13 ஆயிரத்து 27 ரூபாயும், பனங்காலி மஞ்சள் அதிகபட்சமாக 16 ஆயிரம் ரூபாயும், குறைந்த பட்சமாக 13 ஆயிரத்து 511 என விற்பனையானது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் தொடர்ந்து விலை சரிவு ஏற்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் குவிண்டாலுக்கு 900 ரூபாய் விலை உயர்வால் மஞ்சள் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.ஏலத்தில் 750 மூட்டைகள் கொண்ட 400 குவிண்டால் மஞ்சள் 54 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத்திடல் விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,01:56 IST

மோகனூர்: "செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத்திடல்கள் அமைத்து மானிய விலையில் இடுபொருட்கள் பெற்று பயன்பெறலாம்' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:மோகனூர் வட்டாரத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், நெல் நாற்று விடும் பணி துவங்கப்பட்டுள்ளது. வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் வெள்ளை பொன்னி, ஏ.டி.டி.36, ஏ.டி.டி.39, ஐ.ஆர்.20 ஆகிய விதை நெல் போதுமான அளவு இருப்பு வைத்து வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.மேலும், மையத்தில் செம்மை நெல் சாகுபடி முறை பற்றி தொழில் நுட்ப ஆலோசனையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து விவசாயிகளும் செம்மை நெல் சாகுபடி முறையை கையாண்டு அதிக மகசூல் பெறலாம்.

ஒரு ஏக்கருக்கு 3 கிலோ நெல் விதை வீதம் பாய் நாற்றங்கால் ஒரு சென்ட் அளவுக்கு அமைத்து 14 நாட்கள் வயதுடைய நாற்றுகளை பறித்து 25க்கு 25 செ.மீ., இடைவெளியில் மார்க்கர் கருவி கொண்டோ, கயிறு பிடித்தோ குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு வயலில் நடவு செய்ய வேண்டும்.நடவு நட்ட பத்து நாட்கள் கழித்து கோனோவீடர் கருவி கொண்டு களைகளை வயலிலே அமுக்கிவிடுவதால், களைகள் கட்டுப்படுத்துவதுடன் தூர்கள் கிளைத்து வரும். அதேபோல் பத்து நாட்கள் இடைவெளியில் நான்கு முறை செய்ய வேண்டும். நீர் மறைய நீர்பாசனம் செய்ய வேண்டும். மேற்கண்ட தொழில் நுட்பங்களை கையாண்டு அதிக மகசூல் பெறலாம்.

மோகனூர் வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடி முறையை ஊக்குவிக்கும் வகையில், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 25, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 40 மற்றும் ஆத்மா திட்டத்தின் கீழ் 10 என 75 செயல் விளக்கத்திடல்களும் அமைக்கப்பட்டுள்ளன.இச்செயல் விளக்கத்திடல்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு நெல் விதை மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. செயல் விளக்கத்திடல் அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பட்டு உற்பத்தி பெருக்க விவசாயிகளுக்கு மானிய உதவி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,02:26 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் 2010-11ம் ஆண்டில் பட்டு உற்பத்தியை பெருக்கு பட்டு வளர்ச்சி துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு மானிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.
இது குறித்து தர்மபுரி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயவேல் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தியை பெருக்க பட்டு வளர்ச்சி துறை மூலம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2010-11ம் ஆண்டில் பட்டு உற்பத்தியை பெருக்கும் வகையில் பட்டு வளர்ச்சி துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் மல்பெரி நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு மானியத்தொகையாக 4,125 ரூபாயும், அதிகப்பட்சம் 2.50 ஏக்கரில் மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு 10 ஆயிரத்து 312 ரூபாயும் வழங்கப்படுகிறது.

பட்டு விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பதற்காக புழு வளர்ப்பு மனை அமைத்தால் தரமான பட்டு உற்பத்தி செய்ய முடியும். அதற்காக விவசாயிகளுக்கு பட்டுப்புழு மனை அமைக்க அரசு தற்போது மானியம் வழங்குகிறது. 1,500 சதுர அடிக்கு மேல் புழு வளர்ப்பு மனை அமைத்தால் மானிய தொகையாக 75 ஆயிரம் ரூபாயும், 1,000 சதுர அடிக்கு மேல் அமைத்தால் 50 ஆயிரம் ரூபாயும், 700 சதுர அடிக்கு மேல் அமைத்தால் 25 ஆயிரம் ரூபாயும் வழஙகப்படுகிறது.

பட்டு விவசாயிகள் 1,200 சதுர அடியில் புழுவளர்ப்பு தாங்கிகள் அமைத்தால் 30 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன புழுவளர்ப்பு தடவாடங்கள் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைத்தால் 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அதிகப்பட்சமாக 2.50 ஏக்கரில் சொட்டு நீர்பாசனம் அமைத்தால் 37 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மகிளர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வரை பட்டு தொழிலில் ஈடுபடும் மகளிருக்கு காப்பீட்டு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

தற்போது ஒரு கிலோ மஞ்சள் பட்டுக்கூடுகள் 200 ரூபாயில் இருந்து 250 ரூபாய் வரையிலும், வெள்ளை பட்டுக்கூடுகள் 250 ரூபாயில் இருந்து 340 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. அதனால், விவசாயிகள் பட்டு உற்பத்தி தொழில் மூலம் அதிக வருவாய் பெற வாய்ப்புள்ளது. தற்போது தர்மபுரி மாவட்டத்தில் புதிதாக மல்பெரி நடவு செய்வதற்கான தட்பவெப்ப நிலை மற்றும் மழை சாதகமாக உள்ளதால் விவசாயிகள் மல்பெரி பயிரிட்டு பயனடைய கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஓசூரில் காய்கறி செடிகளில் அட்டை புழுக்கள் தாக்குதல்: விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,00:14 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் காய்கறி செடிகளை அட்டை புழுக்கள் தாக்கி அழித்து வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

ஓசூர் மற்றும் தேன்னிக்கோட்டை தாலுகாவில் தமிழகத்தில் அதிகளவு காய்கிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர், பூனப்பள்ளி, பேரிகை, பாகலூர், உத்தனப்பள்ளி, ராயக்கோட்டை, பைரமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் காய்கறிகள் உற்பத்தி செய்து ஓசூர் உழவர்சந்தை, பெங்களூரு காய்கறி மார்க்கெட் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வருகின்றனர்.

ஓசூர் அடுத்த பைரமங்கலம், பூனப்பள்ளி, பேளகொண்டப்பள்ளி மற்றும் டி.கொத்தப்பள்ளி கிராமங்களில் தற்போது பருவமழை பயன்படுத்தி, விவசாயிகள் பீன்ஸ், முட்டைகோஸ், கரட்,

முள்ளங்கி, தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை அதிகளவு செய்து உள்ளனர். தற்போது செடிகள் வளர்ச்சியடைந்து ஒரு சில இடங்களில் மகசூல் கிடைத்து வருகிறது.
இந்நிலையில், பைரமங்கலம், டி.கொத்தப்பள்ளி மற்றும் பூனப்பள்ளி சுற்றுவடார கிராமங்களில் சாகுபடி செய்த காய்கறி செடிகளில் அட்டை புழு தாக்குதலால் செடிகள் அழிந்து வருகிறது. செடிகளின் வேர் மற்றும் கிளை, இலைகளை இந்த புழுக்கள் தின்று வருகின்றன. குறிப்பாக வேர்களை புழுக்கள் தாக்குவதால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால், மகசூல் குறைவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

டி.கொத்தப்பள்ளியை சேர்ந்த விவசாயி அப்பையா கூறியதாவது: என்னுடைய விவசாய தோட்டத்தில் ஒரு ஏக்கரில் பீன்ஸ் சாகுபடி செய்தேன். தற்போது மகசூல் கிடைக்கும் நேரத்தில் செடிகள் முழுவதையும் அட்டை புழுக்களை போல் தோற்றமுடைய புழுக்கள் சாப்பிட்டு வருவதால் செடி முழுவதும் அழிந்து வருகிறது. இதனால், செடிகளில் கிளைகள் மட்டும் மிஞ்சியுள்ளது. இரவு நேரத்தில் மட்டும் செடிகளில் ஊர்ந்து சென்று இந்து புழுக்கள் இலை, வேர்களை சாப்பிட்டு வருகின்றன. பகல் நேரத்தில் புழுக்கள் மண்ணுக்குள் சென்று மறைந்து கொள்கின்றன.
ஈரப்பதம் உள்ள பகுதியில் அதிகமாக இந்த புழுக்கள் இனப்பெருக்கம செய்து தோட்டம் முழுவதும் இரவில் ஊர்ந்து செல்கின்றன. வேளாண் அதிகாரிகள் பரிந்துரை செய்த மருந்துகளை செடிகளில் அடித்தும், புழுதாக்குதலை கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால், பல ஆயிரம் செலவு செய்த காய்கறிகளை காப்பாற்றவும் முடியாமல், மகசூலும் கிடைக்காமல் நஷ்டம் அடைந்துள்ளோம். வேளாண்மை துறை அதிகாரிகள் ஆய்வு செய்து புழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், ""பைரமங்கலம் பகுதியில் காய்கறிகளை தாக்கும் இந்த புழுக்கள் புது வகையான புழுக்களாக உள்ளன. அதனால், அவற்றை கட்டுப்படுத்துவது சவாலாக உள்ளது. புழுக்களின் தாக்குதல் அம்சம், அவற்றின் அமைப்பு ஆகியவை குறித்து பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் உள்ள வேளாண் விஞ்ஞானிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளோம். அவர்கள் காய்கறிகளை தாக்கும் இந்த புதுவகையான புழுக்கள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். ஆய்வின் முடிவுப்படி செடிகளை தாக்கும் புழுக்களை கண்டறிந்து, அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

மா உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் : பல்கலை துணைவேந்தர் யோசனை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,22:45 IST

கோவை : ""மா உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றி தரமான, ஏற்றுமதிக்கு உகந்த பழங்களை உற்பத்தி செய்வது அவசியம்,'' என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

"மா கிளை படர்வு மேலாண்மை' குறித்த பயிற்சி முகாம், தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நடந்தது. முகாமை துவக்கி வைத்து, பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: இந்தியா, மா உற்பத்தியில் சர்வதேச அளவில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. "மா'வில் 50 சதவீத உற்பத்தியை தன்னகத்தே கொண்டுள்ள இந்தியாவில், ஏற்றுமதிக்கு உகந்த ஏராளமான ரகங்கள் உள்ளன. மா உற்பத்தித்திறனை அதிகரிக்க உயர் தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும். தமிழ்நாட்டில், 2001 - 02ல் சுமார் 1.1 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு வந்த மா, படிப்படியாக உயர்ந்து தற்போது 1.37 லட்சம் எக்டரில் பயிரிடப்படுகிறது.

இந்திய மற்றும் தமிழக வேளாண்மையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெருக்க தோட்டக் கலைத்துறையில் ஏற்பட்டு வரும் அபரிமிதமான வளர்ச்சியால் மட்டுமே முடியும். தேசிய அளவில் மா ஏற்றுமதியை ஊக்குவிப்பதன் மூலம் அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மா உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு மா ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்தப்பட் டுள்ளது. நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றி தரமான, ஏற்றுமதிக்கு உகந்த பழங்களை உற்பத்தி செய்வது அவசியம். பல தொழில் நுட்பங்கள் மா உற்பத்திக்காக கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், விவசாயிகளுக்கு இன்றும் முழுமையாக சென்றடையவில்லை. இவ்வாறு, முருகேசபூபதி பேசினார்.

வேளாண் பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா பேசுகையில், ""இன்றைய காலகட்டத்தில் தோட்டக் கலைத்துறை பலவித சவால்களை சந்திக்கிறது. குறைந்து வரும் நீர், நில பற்றாக்குறை மற்றும் அறுவடைக்குப்பின் சேதம் போன்றவற்றை கருத்தில் கொண்டு விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றி உற்பத்தியை பெருக்க வேண்டும்; அவை ஏற்றுமதிக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும்.

பொதுவாக மாம்பழங்கள் எளிதில் அழுகக் கூடியவை. எனவே, அவற்றின் சேமிப்பை அதிகரிக்க குளிர் தொடர் சங்கிலி மற்றும் விற்பனை ஆகியவற்றை மேம்படுத்த மா விவசாயிகள் முன்வர வேண்டும். அதிலிருந்து தயாரிக் கப்படும் ஏனைய மதிப்பூட்டப் பட்ட பொருட்கள் உற்பத்தி செய்ய தொழில் முனைவோர் முன்வர வேண்டும்,'' என்றார்.

தோட்டக்கலை கல்லூரி முதல்வர் குமார் பேசுகையில், ""வரும் 2011 மற்றும் 2012ல் இந்தியா மா உற்பத்தியை இரட்டிப்பாக்க வேண்டும். ""மத்திய அரசின் தேசிய தோட் டக்கலை இயக்கத்தின்

மூலம் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதில் முனைப்போடு தோட்டக்கலை கல்லூரி செயல்பட்டு வருகிறது. உற்பத்தியை பெருக்க அடர் நடவு முறை, சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் நீர் வழி உரமிடுதல், அறுவடைக்குப்பின் தொழில்நுட்பம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும்," என்றார்.

தேசிய வேளாண்மை முன்னோடி திட்ட அலுவலர் பாலமோகன், திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் சாதனைகள் குறித்து விளக்கினார். இரண்டு நாட்கள் நடந்த இப்பயிற்சி முகாமில், பெங்களூருவை சேர்ந்த இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பழத்துறை தலைவர் சித்திரைசெல்வன், ஐதராபாத்தை சேர்ந்த பேராசிரியர் ரெட்டி, "ஜெயின் இரிகேஷனை' சேர்ந்த சோமன் ஆகியோர் மா கிளைப்படர்வு மேலாண்மை குறித்து பேசினர். இதில், 20 விஞ்ஞானிகள், 50க்கும் மேற்பட்ட தோட்டக் கலை அலுவலர்கள் மற்றும் தமிழகம், ஆந்திராவை சேர்ந்த 60 மா உற்பத்தியாளர்கள் பங்கேற்றனர். பழத்துறை தலைவர் சூரியநாதசுந்தரம் நன்றி கூறினார்.

**மண் வளம் மற்றும் பயிர் உற்பத்திக்குசமச்சீர் உர மேலாண்மையே சிறந்தது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,02:45 IST

கோவை :""மண் வளம் மற்றும் பயிர் உற்பத்திக்கு ஒருங்கிணைந்த சமச்சீர் உர மேலாண்மையே உகந்தது," என, கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார்.அவர் நிருபர்களிடம் கூறியதாவது:ஒவ்வொரு பயிரையும் தொடர்ந்து பயிரிடுவதால் ஏற்படும் ஊட்டச்சத்துக்களின் தேவை மற்றும் குறைபாடுகளை கண்டறிய நீண்டகால ஆராய்ச்சி திட்டங்களை 1843ம் ஆண்டு முதல் 1856ம் ஆண்டு வரை லாஸ் மற்றும் கில்பெர்ட் என்ற விஞ்ஞானிகள் ரோதாம்ஸ்டெட் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் துவக்கினர். இவை இன்றளவும் சரித்திரப்புகழ் கொண்ட பாரம்பரிய வேளாண் ஆய்வுத் திடல்கள் என உலகமெங்கும் அறியப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வு திடல்களிலிருந்து இதுவரை 3 லட்சம் மண் மற்றும் பயிர் மாதிரிகளுக்கு மேல் சோதனை செய்யப்பட்டு அதன் விளக்கங்களின் தொகுப்பு 160 ஆண்டு கால ஆய்வு அனுபவங்களாக வெளியிடப்பட்டு வருகிறது.இந்தியாவில் நீண்ட கால தொடர் ஆய்வுகள் 20ம் நூற்றாண்டு துவக்கத்தில் முதல் முறையாக கான்பூர், பீகார் மற்றும் கோவை உள்ளிட்ட இடங்களில் 1909ம் ஆண்டு துவக்கப்பட்டன.

இதை தொடர்ந்து சாஜகான்பூர், பாடேகான், இந்தூர், முசாபர்நகர், அனகாபள்ளி, ராஞ்சி உள்ளிட்ட இடங்களிலும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் மாநில பல்கலைகளின் முயற்சியால் இவ்வகை ஆய்வுகள் துவக்கப்பட்டன. பல்வேறு காரணங்களால் பல இடங்களில்

இத்தகைய ஆராய்ச்சிகள் நிறுத்தப்பட்டுவிட்டன.தமிழ்நாடு வேளாண் பல்கலை இன்று வரை இந்த நிரந்தர தொடர் ஆராய்ச்சியினை நடத்தி வருகிறது. இந்த ஆராய்ச்சியின் விளக்கங்கள் விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் பயனளித்து வருகிறது. தொடர்ந்து பயிரிடும் நிலத்தில் சத்துக்களை தனித்தோ, கூட்டாகவோ எருக்களோடு ஒருங்கிணைந்தோ ஒரே மாதிரியாக எப்போதும் இடும்போது மண்ணிலும், பயிரிலும் ஏற்படும் விளைவுகளை அறிவதே இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம். உரமிடும் முறைகள், பயிரின் விளைச்சல், சத்துக்களை பயிர்கள் எடுத்து கொள்ளும் திறன், பயிரில் சத்துக்களின் அளவு, மண்ணில் இருக்கும் சத்துக்கள், சத்துக்களின் நிலைமாற்றங்கள் உள்ளிட்டவற்றில் ஏற்படுத்தும் விளைவுகள் கண்டறியப்படுகின்றன.அதன் அடிப்படையில் தொடர் பயிரிடும் மற்றும் உரமிடும் முறைகள் மண்ணின் வளத்தில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் மேம்பாடுகளை அறிந்து, சரியான முடிவுகள் பரிந்துரைகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இதுவரை 151 பயிர்கள் இந்த ஆய்வு திடலில் பயிரிடப்பட்டுள்ளன.அனைத்து சோதனைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த உர நிர்வாக முறையே தொடர்ந்து நல்விளைச்சலுக்கு சரியான வழி என்பதை இந்த தொடர் உரச்சோதனை திடல் நிரூபித்து வருகிறது.நிரந்தர உரப்பரிசோதனை ஆய்வுததிடலின் முடிவுகளின் அடிப்டையில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உர நிர்வாக முறையே சிறந்தது என பரிந்துரைக்கப்படுகிறது.இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார்.

**கொப்பரை விலை தொடர்ந்து உயர்வு; விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,02:43 IST

பொள்ளாச்சி : வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது. மார்க்கெட்டில் கொப்பரை வாங்க ஆள் இருந்தும், விற்க ஆளில்லாத நிலை நீடிக்கிறது.தேங்காய் சீசன் நிறைவடைந்துள்ள இந்நிலையில், தேங்காய் வரத்து குறைந்து கொப்பரை உற்பத்தியும் குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டு விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 11ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 44 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. தேங்காய் எண்ணெய் டின்னுக்கு 935 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 67 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.விவசாயிகள் பறித்து, உரித்த தேங்காய் டன்னுக்கு 12,750 ரூபாய் (பச்சை தேங்காய்), 13,200 ரூபாய் (காய்ந்த தேங்காய்) விலை கொடுக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 7.50 ரூபாயும், தோட்டத்தில் பறித்து கொள்வதற்கு ஒரு

தேங்காய்க்கு அதிகபட்சமாக 6.50 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. காங்கேயம் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோ 49 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,025 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 80 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 14,750 ரூபாய் (பச்சை தேங்காய்), 15,500 ரூபாய் (காய்ந்த தேங்காய்) விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

விவசாயிகள் பறித்து வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 8 ரூபாய் முதல் 8. 50 ரூபாய் வரையும், தென்னை மரத்தில் இருந்து பறித்துக்கொள்வதற்கு 7.25 ரூபாய் முதல் 7.50 ரூபாய் வரை விலை கிடைத்தது.கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:தினமும் மார்க்கெட் நிலவரம் மாறிக்கொண்டே உள்ளது. கடந்த மூன்று வாரமாக கொப்பரை விலை உயர்ந்து வருகிறது.இரண்டு வாரத்தில், தேங்காய் விலை டன்னுக்கு 3,000 ரூபாய் உயர்ந்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.மார்க்கெட்டில் கொப்பரை கொள்முதலுக்கு தனியார் எண்ணெய் நிறுவனங்கள் தயார் நிலையில் உள்ளன. ஆனால், உற்பத்தியாளர்கள் இன்னும் விலை உயரும் என்று இருப்பு வைத்துள்ளனர். இதனால், கொப்பரை விலை கிலோ 50 ரூபாயை நெருங்கி வருகிறது. அதனால் மத்திய, மாநில அரசுகள் கொப்பரைக்கு நிர்ணயித்துள்ள ஆதரவு விலையை கிலோவுக்கு 60 ரூபாயாக உயர்த்த வேண்டும்.
இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

**சோலையாறு அணை நீர்மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,02:43 IST

வால்பாறை :வால்பாறையில் பெய்துவரும் மழையினால் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று 149 அடியாக உயர்ந்தது.வால்பாறையில் ஆண்டு தோறும் பெய்துவரும் தென்மேற்குப்பருவ மழையை கருத்தில் கொண்டு பி.ஏ.பி.பாசனத்திட்டத்தின் கீழ் சோலையாறு, மேல்நீராறு, கீழ்நீராறு, அப்பர்ஆழியாறு மற்றும் காடம்பாறை ஆகிய அணைகள் கட்டப்பட்டன.கடந்த ஆண்டு பத்து முறை நிரம்பிய சோலையாறு அணை இந்த ஆண்டு ஒரு முறை கூட நிரம்பவில்லை.கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தென்மேற்குப்பருவ மழையின் வேகம் குறைந்ததால் அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.வால்பாறையில் விட்டு,விட்டு மழை பெய்துவருவதால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்துவருகிறது.இதனிடையே வால்பாறை டவுன் பகுதி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அக்காமலை செக் டேம் கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக நிரம்பிய நிலையிலேயே இருப்பதால் வால்பாறை மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வால்பாறையில் பெய்து வரும் மழையினால் 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று பகல் 1.00 மணிக்கு 149 அடியாக உயர்ந்தது. அணை நிரம்ப 11 அடி நீர்மட்டமே உள்ள நிலையில் மழைப்பொழிவு குறைந்ததால் அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.அணைக்கு விநாடிக்கு 948 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம் பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 418 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**வாழை மர தண்டு பகுதியில் குலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,23:23 IST

அவிநாசி : அவிநாசி அருகே செட்டிப்புதூரில் வாழை மரத்தின் தண்டு பகுதியில் குலை தள்ளியுள்ளது.
அவிநாசி ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சி - செட்டிப்புதூரை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவரது வீட்டுக்கு முன்புறத்தில் வாழை மரங்களை வைத்துள்ளார். இதில் ஒரு மரத்தில் தரையில் இருந்து மூன்றடி உயரத்தில் குலை தள்ளியுள்ளது. ஒரு வாரத்துக்கு முன் வாழையின் தண்டு பகுதியில் பிளவு ஏற்பட்டு, குலை தள்ளியுள்ளது. வழக்கத்துக்கு மாறாக மரத்தின் நடுவில் குலை தள்ளியதை அறிந்த அப்பகுதி பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.
அவிநாசி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரனிடம் கேட்ட போது, ""மரபியல் கோளாறு காரணமாக சில சமயங்களில் இவ்வாறு நடக்கும். இது மாதிரியான நிகழ்வுகளில், வாழைத்தாரின் வளர்ச்சி முழுமையாக இருக்காது. இனி, மேற்புறத்தில் குலை தள்ளுவதற்கும் வாய்ப்பு குறைவு," என்றார்.

**சூறாவளி காற்றில் பாதிப்பான வாழைக்கு காப்பீட்டு திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,23:39 IST

வத்தலக்குண்டு : காரீப் பருவத்திற்கான வேளாண் காப்பீட்டு திட் டத்தை விவசாயிகள் பயன் படுத்த தோட்டக்கலை துறை அறிவுறுத்தி உள்ளது. வத்தலக்குண்டு பகுதிகளில் இயற்கை சீற்றத்தால் ஏற்படும் மகசூல் பாதிப் பிற்காக,மானியத்தில் பிரிமியம் செலுத்தி காப்பீடு பெற்றுக்கொள்ளலாம். வாழைக்கு பெரிய,வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள், 6.60 சதவீதம் பிரிமியம் செலுத்த வேண்டும். வங்கிகளில் கடன் பெறாத சிறு,குறு விவசாயிகள் ஏக்கருக்கு 11 ஆயிரத்து 632 ரூபாயை பிரிமியம் செலுத்த வேண்டும். வெங்காயத்திற்கு சிறு, குறு விவசாயிகள்

கடன் தொகையில் 6.20 சதவீதம் பிரிமியம் செலுத்த வேண் டும்.  கடன் பெறா விவசாயிகள் 2 ஆயிரத்து 670 ரூபாய் கட்ட வேண்டும். கடன் பெற்ற விவசாயிகள் இம் மாத இறுதிக்குள் தோட்டக் கலை,கூட்டுறவு, தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளை அணுகி பயன் பெறலாம் என தோட்டக் கலை உதவி இயக்குநர் சங்கர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு ஆலோசனை மையங்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,23:50 IST

தேனி : தேனி மாவட்டத்தில் கம்பம், டொம்புச்சேரி, வீரபாண்டி, ஓடைப்பட்டி, லட்சுமிபுரம், கோம்பையில் விவசாய சேவை மையங்கள் தொடங்கப் பட்டு செயல்பட்டு வருகின்றன.  இங்கு டிராக்டர், பவர் டில்லர் உட்பட உபகரணங்கள் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கம்பம், சில்லமரத்துப்பட்டி, கோம்பை, கடமலைக்குண்டு சீப்பாலக்கோட்டையில் அக்ரி கிளினிக்குகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு குறைந்த கட்டணத்தில் மண், நீர் பரிசோதனைகள் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

**மானியத்தில் பழச்செடிகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,00:08 IST

வெம்பக்கோட்டை: வெம்பக் கோட்டை தோட்டக் கலை உதவி இயக்குனர் தாமோதரக்கண்ணனின் செய்திக் குறிப்பு: வெம்பக்கோட்டை தோட்டக் கலை அலுவலகத்தில் தரமான மற்றும் வீரிய ரக காய்கறி விதைகள் உள்ளன. இந்த விதைகளை சாகுபடி செய்வது குறித்த தொழில் நுட்பமும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தக்காளி, வெண்டை, மிளகாய், முருங்கை, கீரை,மா, கொய்யா,எலுமிச்சை போன்ற பழச் செடிகளுக்கும் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தோட்டக் கலை துறை அலுவலர் மணிகண்டனை நேரில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**வேளாண் அமைச்சருக்கு நெல்லையில் உற்சாக வரவேற்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,02:28 IST

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்திற்கு வருகை தந்த வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்திற்கு சங்கர்நகரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.தென்காசியில் நடைபெறும் அரசு விழாக்களில் பங்கேற்கவும், பெரியார் விருது பெறவும் நெல்லை மாவட்டத்திற்கு வேளாண்

துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் நேற்று வருகை தந்தார். அவருக்கு சங்கர்நகர் இந்தியா சிமெண்ட்ஸ் விருந்தினர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் நெல்லை மாவட்ட கலெக்டர் ஜெயராமன், நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழு தலைவர் போர்வெல் கணேசன், நெல்லை வேளாண்மை துறை இணை இயக்குநர் சுப்பிரமணியன், துணை இயக்குநர் துரைபாண்டியன்,நெல்லை வேளாண் துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) தியாகராஜன், நெல்லை விதை ஆய்வு துணை இயக்குநர் சவுந்திரராஜன், நெல்லை விற்பனை குழு செயலாளர் கஜேந்திரபாண்டியன், வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) விஜயகுமார், நெல்லை விதைச்சான்று அலுவலர் அசோக்குமார், வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ், கற்பக சுந்தரம், லட்சுமணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,01:27 IST

புதியம்புத்தூர் : வாகைகுளத்தில் தோட்டக்கலை சார்பாக காய்கறி சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி நடந்தது. வாகைகுளம் ஸ்காட் வேளாண்மை பயிற்சி மையத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக இப்பயிற்சி நடந்தது. பயிற்சியில் புதியம்புத்தூர், தென்னம்பட்டி, வெங்கடாசலபுரம், நடுவக்குறிச்சி பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். ஓட்டப்பிடாரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கனகராஜ் வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குனர் குருமூர்த்தி (தூத்துக்குடி) தலைமை வகித்தார்.

ஆத்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் மாவட்ட மற்றும் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி, விவசாய ஆர்வலர் குழு ஏற்படுத்துதல், பண்ணை கல்வி மற்றும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி பேராசிரியர் மோகன் மண் மாதிரி எடுத்தல் போன்ற தொழில்நுட்பங்களை பற்றி விளக்கினார். உதவி பேராசிரியர் அசோக்குமார்  பயிர் பாதுகாப்பு, தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார். காய்கறிகளை பதப்படுத்தி பாதுகாத்தல் குறித்த தொழில்நுட்பங்களை உதவி பேராசிரியர் சுமதி எடுத்துக் கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மாரிமுத்து செய்திருந்தார். வேல்ராஜ் நன்றி கூறினார்.

**பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கக் கூடாது உழவர் உழைப்பாளர் கட்சிதலைவர் செல்லமுத்து பேட்டி**

திருப்பூர், செப்.20–

பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கக் கூடாது என்று உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து கூறினார்.

உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் கே.செல்லமுத்து திருப்பூரில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தமிழக அரசுக்கு நன்றி

தமிழக முதல்–அமைச்சர் மு.கருணாநிதி, விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தி வருகிறார். தென்னை விவசாயிகளுக்கு நலவாரியம் அமைத்தும், 25 லட்சம் பம்பு செட்டுக்கு இலவச மின்சாரம் வழங்கியும், இலவச மின்மோட்டார் அறிவித்தும், பி.ஏ.பி. கால்வாய்க்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்தும், 58 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சத்துணவு முட்டை வழங்க ரூ.125 கோடி ஒதுக்கீடும் செய்துள்ள தமிழக அரசுக்கு உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் கடுமையான உழைப்பாலும் மழை, புயல், வெள்ளம், வறட்சி போன்ற பாதிப்புக்கு இடையே பருத்தி உற்பத்தி செய்து நாட்டுக்கு கொடுக்கிறார்கள். இருந்தும் கட்டுப்படியாகும் விலை இல்லாத காரணத்தால் ஆந்திரா, குஜராத் மற்றும் விதர்பா போன்ற பகுதிகளில் உள்ள பருத்தி உற்பத்தியாளர்கள் கடன் கட்ட முடியாமல் தற்கொலைக்கு ஆளாகி உள்ளார்கள்.

விளைபொருளுக்கு விலை

இந்த சூழ்நிலையில் ஜவுளி தொழிலில் ஈடுபட்டுள்ளோர், நூற்பாலை அதிபர்கள் முதல் ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் ஒரே குரலில் பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகிறார்கள். இதை

எந்த விவசாயியும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பருத்தி ஏற்றுமதி செய்யும் போதுதான் ஏழை பருத்தி விவசாயி கடன் இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியும். ஒரு பயிரை விதைக்கும் முன் விளை பொருளுக்கு என்ன விலை என்பதை அறிவிக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாகும். இந்த நிலையில் உள்நாட்டு தேவைக்கு போக மீதம் உள்ள பருத்தியை ஏற்றுமதிக்கு அனுமதிக்கலாம் என்று கோரிக்கை வைப்பது நியாயம் தானா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

தடை விதிக்கக் கூடாது

ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சிரமம் வரும் காலங்களில் அரசிடம் கோரிக்கை வைக்கிற போது, அடுத்தவர்களின் உரிமைகளை பாதிக்காத வகையில் கோரிக்கை வைக்க வேண்டும். இப்படிப்பட்ட எதிர்மறையான அணுகு முறையை தொடர்ந்து கடைப்பிடித்ததால் தான் தமிழ்நாட்டில் பருத்தி விவசாயம் அழிவை நோக்கி சென்று வருகிறது. தமிழகத்தில் கிட்டதட்ட 98 சதவீதம் பருத்தி உற்பத்தி குறைந்து விட்டது. பருத்தி விளைச்சலுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் ஒவ்வொரு நூற்பாலையும் அவர்களது தேவைக்கு ஆங்காங்கே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர சிரமப்பட்டு உற்பத்தியாகும் பருத்தியை அரசு நிர்வாக எந்திரத்தை கொண்டு அடிமாட்டு விலைக்கு வாங்கக் கூடாது. எனவே பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முற்றிலும் எதிர்க்கிறோம். பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய, மாநில அரசுகள் ஏற்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

மிகப்பெரிய போராட்டம்

இதுதொடர்பாக உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் குழுவாக சென்று தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதியை சந்தித்து வலியுறுத்தி அவருடைய அனுமதி கடிதம் பெற்று டெல்லி சென்று மத்திய அரசின் ஜவுளித்துறை அதிகாரிகளிடம் முறையிட உள்ளோம்.

பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் உழவர் உழைப்பாளர் கட்சி, பாரதிய கிஷான் சங்கத்துடன் இணைந்து இந்திய அளவில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தும்.

இவ்வாறு செல்லமுத்து கூறினார்.

பேட்டியின் போது மாநில செயலாளர் குப்புசாமி, பொருளாளர் பாலசுப்பிரமணியம், ஆலோசகர் கே.சி.எம்.பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாநகர செயலாளர் ஜீவா கிட்டு, தலைவர் மணி உள்ளிட்டவர்கள் உடன் இருந்தனர்.

## குன்னூர் ஏல மையத்தில் 28 சதவீத தேயிலை தூள் தேக்கம் விவசாயிகள் கவலை

*குன்னூர், செப்.20–*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு அதிக தேவை ஏற்படாததால் சுமார் 28 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆகாமல் தேங்கியது. இதனால் தேயிலை விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.*

*ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடை பெற்று வருகிறது. இந்த ஏலத்தை குன்னூர் தேயிலை வர்த்தக அமைப்பினர் நடத்தி வருகின்றனர்.*

*ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்குபெற்று தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள். விற் பனை எண் 37–க்கான ஏலம் கடந்த 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது.*

*பாகிஸ்தான்*

*இதில் 8 லட்சத்து 77 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 9 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. தேயிலை ஏலத்தை பொறுத்த வரை ஏற்றுமதியாளர்களில் பாகிஸ்தான், ரஷ்யா, எகிப்து ஆகிய நாட்டு வர்த்தகர்கள் தேயிலை தூளை வாங்கினர். உள்நாட்டு வர்த்தகர்கள் அனைத்து மாநிலங்களில் இருந்தும் பங்குபெற்றனர். ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மந்தமாக இருந்த தால் தேயிலை தூளுக்கு 3 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட் டது.*

*தேக்கம்*

*தேயிலை தூளுக்கு ஏலத்தில் அதிக கிராக்கி இல்லாததால் 28 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது. இதன் காரணமாக வும் தேயிலை தூளுக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 132 ரூபாயாக இருந்தது. 60 தேயிலை தொழிற் சாலைகள் 100 ரூபாய்க்கு தங்கள் சி.டி.சி. ரக தேயிலை தூளை விற்பனை செய்தனர்.*

*ஆர்தோடக்ஸ் தேயிலை தூள்*

*தேயிலை எஸ்டேட்டுகள் தயாரிக்கும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை 205 ரூபாயாக இருந்தது.மேலும் 30 தேயிலை தொழிற்சாலைகள் கிலோ ஒன்று*

*100 ரூபாய்க்கு மேல் ஆர்தோடக்ஸ் தேயிலை தூளை விற்பனை செய்தனர்.*

*இலை ரக தேயிலை தூளின் சராசரி விலையாக சாதாரண ரகத்திற்கு 34 ரூபாயில் இருந்து 42 ரூபாய் வரையிலும், உயர் ரக தேயிலை தூளுக்கு 80 ரூபாயில் இருந்து 120 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகம்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை தேயிலை தூள் 42 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரையிலும், உயர் ரக தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 110 ரூபாய்வரையிலும் ஏலம் சென் றது. விற்பனை எண் 38–க்கான ஏலம் வருகிற 23, 24 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 64 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது. குன்னூர் ஏல மையத்தில் 28 சதவீத தேயிலை தூள் விற்பனையாகமல் தேக்கம் அடைந்திருப்பது, விவசாயி கள் இடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.*